மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இத்தகைய தேவை பல மாவட்டங்களில் உள்ள பல மட்டத்தில் உள்ள நீதிமன்றங்களில் உள்ளன என்பது அரசுக்குத் தெரியும். ஆனால் இது பன்னெடுங்காலமாக உள்ள பிரச்னையாக இருப்பதால், எடுத்த எடுப்பிலேயே இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் காண நிதி ஆதாரம் சிறிது தடையாக இருக்கிறது. இதனை அரசு தற்போது ஆய்ந்து வருகிறது. விரைவில் பரிகாரம் தேடும். நாகப்பட்டினம் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. விரைவில் நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு நிதித்துறை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-20)

திரு. மு. அரங்கநாதன்: துணைத் தலைவரவர்களே, சுமார் 7,8 மாதங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட குன்னூர் முன்சீப் நீதிமன்றத்திற்கு இன்னும் ஊழியர்கள், ஸ்டாப்ஃஸ் போடவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதெல்லாம் இந்தக் கேள்வியில் வராது.

திரு. என். வரதராஜன்: துணைத் தலைவரவர்களே, இந்த நாகப்பட்டினம் நீதிமன்றம் பழுதடைந்து மிகவும் மோசமாக இருக்கிறது என்று மனுக்கள் எல்லாம் வந்து நீண்டநாட்கள் ஆகின்றன. ஆகவே, குறைந்த காலகட்டத்திற்குள், 3 அல்லது 4 மாதங்களுக்குள்ளாவது பழுது நீக்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு.சி. பொன்னையன்: துணைத் தலைவரவர்களே, உயர்நீதிமன்றத்திலிருந்து அண்மையில் 1,22,300 ரூபாய் செலவில் மேம்பாடு செய்யலாம் என்று வந்துள்ளது. அதை பொதுத் துறையும் உள்துறையும் ஏற்றிருக்கின்றன, மேலும் அது நிதித் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விரைந்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும்.

1979-1982 ஆம் கல்வி ஆண்டுகளில் கூட்டுறவுத்துறை மூலம் பயிற்சி பெற்ற மாணவர்கள்

*வினா எண்.29—திரு. இல.பலராமன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைசசர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979-1980, 1980-1981, 1981-1982-ம் ஆண்டுகளில் கூட்டுறவுத்துறை மூலம் பயிற்சி பெற்ற மாணவர்கள் ஆண்கள், பெண்கள் எத்தனை பேர்?

(ஆ) இவர்களில் எத்தனை நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ)

வருடம்	ஆண்
1979-80	1042
1980-81	1020
1981-82	1108

1983 சனவரி 28]

(ஆ) 1979-80, 1980-81, 1981-82 ஆம் கல்வி ஆண்டுகளில் கூட்டுறவுத்துறை மூலம் பயிற்சி பெற்ற மாணவர்களில் 432 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலமாக 1-5-1981 முதல் 30-4-1982 வரை வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. இதில் பெண்களின் எண்ணிக்கை 37 ஆகும்.

திரு. தி. கா. நல்லப்பன்: துணைத் தலைவரவர்களே, இந்த கூட்டுறவுப் பயிற்சிக்கு வருகின்ற மாணவர்கள் பட்டதாரிகள் என்ற அடிப்படையில் சேர்க்கப்படுகிறார்களா அல்லது 10-வது வகுப்பு படித்தவர்கள் என்ற அடிப்படையில் சேர்க்கப்படுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவரவர்களே, இரு சாராரும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. பாபு ஜனார்த்தனன்: துணைத் தலைவரவர்களே, பயிற்சி பெற்றவர்களில் ஒருபகுதி பேர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது; நிறையபேர் பயிற்சி பெற்று, வேலை கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். வேலையில்லாமல் இருக்கின்றவர்களுக்கு வேறு ஏதாவது வழி செய்யப்பட்டிருக்கிறதா அல்லது கூட்டுறவுத் துறையிலே வேலைவாய்ப்பு அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவரவர்களே, 432 பேர்களுக்கு இதுவரை வேலை தரப்பட்டிருக்கிறது. 2602 பேர் வேலை கேட்டு மனு கொடுத்திருக்கிறார்கள். அவ்வப்போது கூட்டுறவுத் துறையில் விரிவாக்கம் வருகிறபோது அவைகளை கவனித்து ஆவன செய்யப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: துணைத் தலைவரவர்களே, 3170 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்; 432 பேர்களுக்கு மட்டும்தான் வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதிகமான பேர்கள் பயிற்சி பெற்று, வேலையில்லாமல் இருக்கின்ற காரணத்தால் அரசு தனிக் கவனம் செலுத்தி பயிற்சி பெற்றவர்கள் அனைவருக்கும் ஏதாவது ஒரு வேலை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவரவர்களே, பயிற்சி பெறுவதற்கு முன்பாக தற்காலிகமாக பலர் பல கூட்டுறவு நிறுவனங்களில் வேலையில் இருக்கிறார்கள். அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டு பயிற்சி பெற்றவர்களை சேர்க்கலாம். அது தார்மீக முறையில் சரியல்ல. 10 ஆண்டு, 8 ஆண்டுக்காலம் அவர்கள் தற்காலிகமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்குவதால் பயிற்சி பெற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. கூட்டுறவுத் துறையில் அவ்வப்போது விரிவாக்கம் ஏற்படுகின்ற வாய்ப்பு இருப்பதால் அனைவருக்கும் வேலை கிடைக்கும். இனிமேல் கூட்டுறவுத் துறையில் கண்டிப்பாக பயிற்சி பெற்றவர்களுக்குத்தான் வேலை கொடுகக வேண்டுமென்று நிலையைக் கொண்டுவந்திருக்கிறோம்,